# தேசியம்
THESIYAM ජේසියම්
www.thesiyamnews.com

குரல் - 44 | 03.05.2023 (புதன்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00



சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259




## யாழில் அத்துமீறிய பௌத்த ஆக்கிரமிப்பு இன்று கண்டனப் போராட்டம்

பக்கம் 5



# தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு மும்முனைப் போட்டி

## பகிரங்க அறிவிப்பு விடுத்த மாவை!

கடந்த தேர்தலின் போதே சிறீதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தலைமைப் பதவி குறித்த நகர்வுகளில், களமிறங்கிவிட்டதாகவும், சுமந்திரனை வெல்ல வைப்பதற்கு, சிறீதரன் உதவியமைக்கான காரணமும் தலைமைப் பதவியைக் குறிவைத்ததாகவே அமைந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 5

## தமிழர் பிரச்சினைக்கான தீர்வு சுயநிர்ணய உரிமையே - ரணிலிற்கு பதிலடி!



தமிழ் மக்களின் பிரச்சினைக்கான முறையான தீர்வு சுய நிர்ணய உரிமையே என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 5

## காவி உடையில் அரசியல் செய்யும் ஆமதுருக்களை கட்டுக்குள் கொண்டு வாருங்கள்!

### மனோ ரணிலிடம் வலியுறுத்து!

"இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு", "பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்" என்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால், இக்கதையை நீங்கள் கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னிருந்து சொல்லி வருகின்றீர்கள். பெப்ரவரி

பக்கம் 5



## தமிழர்களின் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி கூறுவது நகைப்பிற்குரியது சுமந்திரன் ஆதங்கம்!

நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னதாக தமிழர்களின் இனப்பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என கூறிய ஜனாதிபதி பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொள்வதும் மட்டுமே நின்றுவிடுவதாகவும்

பக்கம் 5

## விஜிதாவின் மரணத்தில் ஊடகங்கள் தலைமறைவு.!!



யாழ்ப்பாணச் சமூகம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், சுமந்திரனின் யாழ் மாவட்ட இணைப்பாளரும், இலங்கை தமிழ் அரசு கட்சியின் காங்கேசன்துறை தொகுதிக்கிளை தலைவருமான சுகிர்தன் வீட்டிற்குள் விஜிதாவின் இறப்பை தற்கொலை எனக் கருதிவிட்டு கடந்து போகின்றதா?

பக்கம் 5

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## இதனை செய்ய முன்வருவாரா ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க...?

**"நாம் முன்னோக்கி பயணிக்க வேண்டுமாயின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும். இது தொடர்பில் பேச்சு நடத்தி வருகின்றோம். இது குறித்து இவ் வருட இறுதிக்குள் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பெரும்பான்மை சிங்கள மக்களையும் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களையும் பாதுகாத்து முன்னோக்கி செல்ல வேண்டும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இனப்பிரச்சனை விடயத்தில் தூரச்செல்வதால் எந்த பயனும் இல்லை என்று நான் தமிழ் கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க வேண்டுமாயின் தயவுசெய்து இந்த பொறிமுறைக்குள் வந்து, விசேடமாக, பாராளுமன்றத்தில் நாம் அனைவரும் அரசாங்கமாக இணைந்து செயற்பட முன்வரவேண்டும்."**

கொழும்பில் நிகழ்ந்த ஜக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டத்தில் சூம் எனப்படும் மெய்நிகர் வழியாக உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் ஒரு முக்கியமான கருத்துத் தான் இது!

"மேலும், இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான உடன்பாடு, இந்த ஆண்டு எட்டப்படும் என்று எதிர்பார்க்கின்றேன்" என்றும் ஜனாதிபதி தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த கருத்துக்கள் சுட்டிக்காட்டும் விடயம் தான் என்ன?

ஒரே வரியில் சொல்வதானால், தமிழ் முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, சாத்தியமான அளவில், பரந்த அடிப்படையில் தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு அவர் முயற்சிக்கின்றார் என்றுதான் கருதவேண்டும் - கருதமுடியும். இந்த தேசிய அரசாங்க சிந்தனை ஜனாதிபதிக்கு ஓர் புதிய விடயம் அல்ல! பதவியேற்ற பின்னர், ஒருசில தடவைகள் அவர் இதனை திட்டவட்டமாக குறிப்பிட்டது பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலை 2024ம் ஆண்டு முடிவடைவதற்குள் நடாத்தி, மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஓர் ஜனாதிபதியாக வரலாற்றில் இடம் பிடிப்பற்கு அவர் திட்டமிடுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியது அல்ல. 1999 மற்றும் 2005 என அடுத்தடுத்து நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தல்களில், இரண்டு தீர்க்கமான காரணங்களினால் தோல்வியை தழுவியவர் ரணில் விக்கிரமசிங்க.

1999 ஜனாதிபதி தேர்தலில், பிரசாரத்துக்கான இறுதி நாளில், அன்றைய ஜனாதிபதி சந்திரிகாவை குறி வைத்து, தமிழீழ விடுலைப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் மயிரிழையில் அவர் உயிர் தப்பிய போது, ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதிக் கனவு உடைந்து சிதறியது!

மீண்டும் 2005ல், அவர் ஜனாதிபதி தேர்தலில் பிரகாசமான வெற்றிவாய்ப்போடு களத்தில் நின்ற வேளையில், விடுதலைப்புலிகள் அறிவித்த தேர்தல் பகிஷ்கரிப்பு, வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் வாக்குகளை வீணாக்கி, கைக்கெட்டிய தூரத்தில் இருந்த அவரது வெற்றியை தூரத்துக் கனவாக தொலைந்துபோக வைத்தது!

ஆனாலும், அரசியலில் எதுவும், எப்படியும் நிகழலாம் என்ற எழுதப்படாத விதியை நிரூபிக்கும் விதத்தில், கடந்த ஆண்டு பாராளுமன்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ஜனாதிபதி கதிரையில் ரணில் அமர்ந்து கொண்டார். இந்த அரசியல் ஆச்சரியத்தின் கதாநாயகன், நேரடித் தேர்தல் மூலம் மீண்டும் ஜனாதிபதி ஆகிவிட இப்போது துடிப்பதை புரிந்து கொள்ள முடியும். அதே நேரத்தில், இந்த இலக்கை அடைவதற்கு ரணில் கையாளும் அரசியல் யுக்தி, ஓர் அபாரமான அரசியல் இரா ஜதந்திரம் என்பதையும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஆயினும்,இவை எல்லாம், நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட ஓர் அரசியற் தலைவரின் தனிப்பட்ட அபிலாசைகளை மையமாகக் கொண்ட நிகழ்ச்சி நிரல் மட்டுமே!

இந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே தமிழ்க் கட்சிகளுக்கு இப்பொழுது ரணில் வலை விரிக்கின்றார். ஆனால், தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்திருக்கும் எந்தவொரு தமிழ்க் கட்சியும் இந்த வலைக்குள் சிக்கமாட்டாது என்று அடித்துக் கூற முடியும்.

அமைச்சுப் பதவியை ஏற்று கொள்வது பற்றி, சமீபகாலத்தில் இரண்டு தடவைகளுக்கு குறையாமல், பகிரங்கமாக பிரஸ்தாபித்த முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கட்சியும் இதில் அடங்கும் - அடங்கியே ஆக வேண்டும். தமிழ் மாநிலத்தின் அரசியல் யதார்த்தம் அதனை நிர்ப்பந்திக்கின்றது.

தமிழ் மக்களின் இருப்பையும் தனித்துவத்தையும் சவாலுக்கு உள்ளாக்கும் விதத்தில், அரசாங்கத்தின் உறுப்புக்களான தொல்லியல் துறையும், வனத்துறையும், வனஜீவராசிகள் துறையும் ஒரு புறமாகவும், அகிம்சையை போதிக்கும் புத்த மதத்தின் பிரதிநிதிகளாக தம்மை பிரகடனம் செய்து கொண்டு, இந்து ஆலயங்களை துவம்சம் செய்யும் விதத்தில், அராஜக வழியில் செயற்படும் பௌத்த பிக்குகள் பலர் மறுபுறமாகவும், தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்கள பேரினவாத ஈட்டிகளை அடிக்கடி பாய்ச்சி வருகின்ற நிலைமை நீடித்து நிற்கையில், படைத்துறையின் பாதுகாப்போடு புத்தரின் சிலைகள் முளைப்பதும், விகாரைகள் தோன்றுவதும் தொடர்கதையாகி விட்டிருக்கையில், ஜனாதிபதியின் இனப்பிரச்சனை தீர்வுப் பேச்சும் தேசிய அரசாங்கம் பற்றிய முன்மொழிவும் வெறும் அலங்கார வார்த்தைகளாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படும்.

தமிழை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் கூட, இதே மனநிலையில் தான் இன்று உள்ளனர்.

சிறுபான்மை சமூகங்கள் எனக் கூறப்படும் தமிழ், முஸ்லிம் இனங்களை பௌத்த சிங்கள பேரினவாதம், துன்புறுத்துவதிலும் தொல்லை கொடுப்பதிலும், தடையேதுமின்றி தொடர்ந்து ஈடுபட்டு நிற்கையில், தனது எந்தவொரு அரசியல் அறிவிப்பும் அழைப்பும், சிறுபான்மை மக்களால், குறிப்பாக தமிழ் மக்களால் வரவேற்கப்பட வேண்டும் என ஜனாதிபதி விரும்புகின்றார் என்றால், அவர் முதலில் ஓர் விடயத்தை செய்தாக வேண்டும்.

தமிழ் மாநிலத்தில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் அரசாங்க அதிகாரத்தின் அப்பட்டமான துஷ்பிரயோகத்தின் துணையோடு, தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வரும் சிங்கள பௌத்த பேரினவாத அடாவடித்தனத்துக்கு ஆளாக்கப்பட்டு வரும் அக்கிரம சூழ்நிலைக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைத்திட, அவர் தனது முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க முன்வர வேண்டும்.

தமிழை தாய் மொழியாக கொண்ட மக்கள் என்ற காரணத்திற்காக, தமிழ் மாநிலத்தில் தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை தடுத்து நிறுத்தவும், துடைத்தெறியவும், மனச்சாட்சியின் அடிப்படையில் அவர் உடனடியாக முன்வரவேண்டும்.

சுருக்கமாக சொல்வதானால், தனது நம்பகத்தன்மையை அதாவது, நம்பகத்தகுந்த மனிதர், தான் என்பதை அவர் முதலில் நிரூபிக்க வேண்டும்.

அதனை முதலில் செய்துவிட்டு, இனப்பிரச்சனைத் தீர்வு பற்றியும், தேசிய அரசாங்கம் பற்றியும் அவர் தாராளமாக தொடர்ந்து பேசலாம். தூரச்செல்ல வேண்டாம் என தமிழ் கட்சிகளையும் அவர் கோரலாம்.

**இதனை செய்ய முன்வருவாரா ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க...?**

ஆசிரியர்

# வடக்கில் 1600 முன்பள்ளிகளில் ஒரே நாளில் சத்துணவு திட்டம்!
## மூன்று மாத காலத்திற்கு உலக வங்கி அனுசரணை

வட மாகாணத்தில் உள்ள சுமார் 1600 முன்பள்ளிகளில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்று மாத காலத்திற்கு இலவச சத்துணவு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை யாழ் மேல் பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி ஒன்றில் இதற்கான செயல் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்பள்ளி மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை பேரும் நோக்குடன் சத்தான உணவை வழங்கும் நோக்குடன் வடமாகாண த்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட முன்பள்ளில் குறித்த திட்டம் செயற்படுத்தப்படுகிறது. உலக வாங்கியின் நிதி அனுசரணை யில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் உள்ளூராட்சி அமைச்சு, வட மாகாண கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து குறித்த செயற்திட்டத்தினை வழி நடத்துகின்றது.

குறித்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வை வடமகாண பிரதம செயலாளர் ஆரம்பித்து வைப்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் வருகை தரவில்லை.

இன் நிலையில் பிரதம செயலாளர் அலுவலக பிரதிநிதி நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் ஜெலீபன் நல்லூர் பிர தேச சுகாதார வைத்திய அதிகாரி வட மாகாண ஆரம்ப பிரிவு உதவி கல்விப் பணிப்பாளர் சற்குண ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.75









வடக்கு செய்திகள் ■ வர்ணன் - யாழ்ப்பாணம்

# பொருளாதார நிலையைச் சீர் செய்வதற்காக தமிழ்த் தரப்புகளை ஏமாற்றாமல், ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விட்டு

## பேச்சுக்கு அழையுங்கள்! கோ.கருணாகரம் ஜனா எம்.பி?



பொருளாதார நிலைமையைச் சீர் செய்வதற்காக தமிழ்த் தரப்புகளை ஏமாற்றாமல் நாட்டின் நிலைக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதமையே முதற் காரணம் என்பதை சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கும், சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூறி அவர்களையும் இணைத்து ஒரு தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திலும், தமிழ் மக்களிடமும் முன்வைத்து விட்டு தமிழ்த் தரப்புகளுடன் பேசினால் நாங்கள் ஒருபோதும் பேச்சுவார்த்தைக்குப் பின்னடிக்கவோ, விலகி நிற்கவோ மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் மேதின உரையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமிழ்த் தரப்பு பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் முகமாக நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய மேதின உரையிலே இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்த வருட இறுதிக்குள் புறையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு தான் உத்தேசித்துள்ளமை என்றவாறான கருத்தை வெளியிட்டிருந்தார். இதே போன்று தான் கடந்த ஆண்டு சென்ற இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்பதாக இனப்பிரச்சனைக்கான தீர்வைக் காண்பதாகக் கூறியிருந்தார்.

நேற்றைய அவரது உரையில் மேலும் இந்த ஆண்டுக்குள்ளே இனப்பிரச்சனைக்கான தீர்வைக் காண்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், தமிழ்த் தரப்புகள், குறிப்பாக தமிழ் கட்சிகள் இந்தத் தீர்வு காணும் விடயத்தைப் பின்னடிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இவர் சில விடயங்களை அறியாமல் இருந்திருக்க மாட்டார் என நினைக்கின்றேன். போராட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து ஒருபுறம் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், இலங்கையிலே மாறி மாறி ஆண்ட அரச தரப்புடன் தமிழ்த் தரப்பினர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருந்தார்கள். இலங்கையில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கூட மஹிந்த ராஜபக்சவுடன் 18 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அதே போன்று அதற்குப் பின்னர் வந்த அரசுகளுடன் குறிப்பாக நல்லாட்சி என்று கூறப்படுகின்ற மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், ஜனாதிபதியையும் விட அதிகாரம் கொண்டவராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த அரசாங்கத்திலே பாராளுமன்றத்தை இனப்பரச்சினைக்குத் தீர்வு காணும் சபையாகக் கூட மாற்றி பல கூட்டங்களை நடத்தியும் இறுதியில் அது ஏமாற்றப்பட்டதாகவே அமைந்தது.

மீண்டும் தற்போது அனைத்து தமிழ் கட்சிகளும் பாராளுமன்றத்தில் தன்னுடன் இணைந்து ஒரு தீர்வைக் காண்பதற்கு முன்வர வேண்டும் என்று கூறுகின்ற ஜனாதிபதி அவர்கள் முதலாவதாக இந்த பொருளாதார நிலைமை இவ்வாறு மாறியதற்கு நாட்டின் இனப்பிரச்சினைதான் முதற் காரணம் என்பதை சிங்களக் கட்சிகளுக்கும், பேரினவாதக் கட்சிகளுக்கும், சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூறி அவர்களைத் தங்களுடன் இணைத்து இந்த இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்க வேண்டும். அந்த தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திலும், தமிழ் மக்களிடமும் முன்வைத்து விட்டு தமிழ்த் தரப்புகளுடன் பேசினால் நாங்கள் ஒருபோதும் பேச்சுவார்த்தைக்குப் பின்னடிக்கவோ, விலகி நிற்கவோ மாட்டோம் என்பதை உறுதியாகத் தெரியப்படுத்துகின்றோம்.

அதைவிடுத்து தற்போதைய பொருளாதார நிலைமையைச் சீர் செய்வதற்காக மீண்டும் மீண்டும் தமிழ்த் தரப்புகளை ஏமாற்றி அரசில் இணைய வைத்து இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்காக மக்களை ஏமாற்றாமல் உண்மையிலேயே இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்துவிட்டு எங்களுடன் பேச வாருங்கள். நாங்கள் உங்களுக்குப் பூரண ஒத்துழைப்புத் தருவது மாத்திரமல்லாமல் இந்த அரசுகளின் அட்டூழியங்களை, அநியாயங்களை, துன்புறுத்தல்களைத் தாங்க முடியாமல் இந்த நாட்டில் இருந்து சென்ற புலம்பெயர் தேசங்களில் நன்றாகச் செழிப்பாக வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுடைய புலம்பெயர் உறவுகள் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கூட நிலைநிறுத்துவதற்கு உதவ முன்வருவார்கள் என்பதையும் நாங்கள் உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம்.

கிழக்கு செய்திகள் ■ சுமன் - மட்டக்களப்பு

# கூட்டமைப்பின் வெட்கம் கெட்ட செயல்

## ஈரோஸ் குற்றச்சாட்டு!




தமிழ் தேசிய கூட்டமைப்பு வெட்கம் கெட்ட செயலை செய்துள்ளனர் எனவும் தமிழர்களின் பாரம்பரிய பூமி கிழக்கில் உள்ள பிற்போக்கு அரசியல் வாதிகளால் ஆக்கிரமிக்கப்படுவதாகவும் ஈரோஸ் கட்சியினுடைய செயலாளர் ராஜ்நாதன் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

பிரபல ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கிழக்கில் பிள்ளையான் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு அங்குள்ள அக்காணிகளை அபகரிப்பதே வேலை. வாகரை, மாங்கேணி போன்ற பிரதேசங்கள் முழுவதும் பல்வேறான காணிகளை அபகரித்துள்ளார். இதனை தட்டி கேட்க்கும் நபர்களை உடனடியாக அரசியல் தலையீட்டில் இடமாற்றம் செய்கிறார்.

மேலும், தமிழ் தேசிய கூட்டமைப்பு வெட்கம் கெட்ட செயலை செய்துள்ளனர். அவர்களின் மக்கள் பிரதிநிதித்துவம் பிழையானது. ஒழுங்கற்ற பிரதிநிதித்துவதால் மக்களின் உரிமைகள் நேரடியாகவே மீறப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

கிழக்கு செய்திகள் ■ மட்டக்களப்பு

# இந்தியாவின் சுதேசி பனை ஆராய்ச்சி நிறுவன குழுவினர்

# யாழ். வருகை



இந்தியாவிலிருந்து சுதேசி பனை ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையினுடைய பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இன்று (02.05.2023) குறித்த குழுவினர் விஜ யம் செய்துள்ளனர்.

இவ்விஜயத்தின் போது, இந்தியாவின் சுதேசி பனை ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் என்.ஏ.கோன் (N.A.khone) தலைமையிலான குழுவினர் பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகூடங்களை பார்வையிட்டுள்ளனர். அத்துடன் அங்கு உற்பத்தி செய்யப்படும் பனை சார் உற்பத்தி பொருட்களையும் பார்வையிட்டுள்ளனர்.



வடக்கு செய்திகள் ■ வர்ணன் - யாழ்ப்பாணம்

# விரைவில் சில முடிவுகளை

## அரசுக்கு அறிவிப்போம்! - சம்பந்தன் அதிரடி




"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் சில முடிவுகளை அரசுக்கு அறிவிக்கும்." - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசால் ஆரம்பிக்கப்பட்ட சர்வகட்சிப் பேச்சு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பிலும், தீர்வு முயற்சிகள் மந்தகதியில் உள்ளமை குறித்தும் இரா. சம்பந்தனிடம் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "தற்போதைய நிலைமையில் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில் மட்டுமல்ல துப்பரவாக எதுவுமே நடைபெறவில்லை. வாக்குறுதிகள் மாத்திரமே அரசால் வழங்கப்படுகின்றன.

ஆனால், நடைமுறையில் எதுவும் இல்லை. அதுதான் உண்மை. இந்த விடயம் சம்பந்தமாக நாம் என்ன செய்ய வேண்டியது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். விரைவில் சில முடிவுகளை அறிவிப்போம்." - என்றார்.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## யாழிலுள்ள பழக்கடையில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

# கொலையா? தற்கொலையா?



யாழ். வடமராட்சி வல்லை முனியப்பர் ஆலய வளாகத்தில் உள்ள பழக்கடையில் ஆண் ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பலாலியை சேர்ந்தவரும் தற்போது அச்சுவேலி பத்தமேனி பகுதியில் வசித்து வருபவருமான வசந்தகுமார் ஸ்ரீகாந்த் (வயது 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தற்கொலையா? கொலையா? என நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## வட பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்ற முடிவுகள்

# கிழக்கில் சாத்தியமில்லை - பிள்ளையான்

வட பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்ற முடிவுகள் கிழக்கு மாகாணத்தில் சாத்தியமில்லை என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான, சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கிழக்கு மாகாணத்தின் அரசியல் பிரச்சினை என்பது வேறு. கிழக்கிலுள்ள சனத்தொகை பரம்பல் அதிலே உள்ள தமிழ் மக்களின் பிரச்சினை, 75வருடகால வரலாற்றிலே யாழ்ப்பாண தலைவர்கள் எடுத்த முடிவின் தோல்வி காரணமாக பலவீனப்பட்டிருக்கின்றது.

எமது சமூகம் அந்தப் பலவீனத்தையும் கட்டியெழுப்பிக் கொண்டு, 75 ஆண்டு கால வரலாற்றிலே எங்களை முந்தி நிற்கின்ற கல்வித்துறையையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்த வேண்டிய மிகப் பெரிய சவாலுக்குள் நிற்கிறோம்.

அதற்குள்தான் தற்போது ஐரோப்பா,



ஆசியா, உள்ளிட்ட உலக நாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், இடதுசாரிக் கொள்கையின்பால் வளர்ந்து நிற்கின்ற நாடுகளின் தாக்கம், இதனை எவ்வாறு பாதிக்கின்றது என்பதோடு, இதனைக் கையாண்டு இலங்கையைப் பாதுகாப்பதோடு, கிழக்கிலுள்ள எமது மக்களின் இருப்பு, கலை கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டிய மிகப் பொரிய பொறுப்புமிக்க கட்டத்தில் நாங்கள் நிற்கினறோம்.

மீண்டும் மீண்டும் இனவாதப் பேச்சுகளைப் பேசுகின்ற கூட்டம் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது. பட்டிருப்புத் தொகுதியில் கடந்த காலங்களில் இருந்தவர்கள் பாலம் வேண்டாம், சிங்களவர்கள் வந்து விடுவார்கள், தமிழர்களை சிங்களம் கற்க வேண்டாம் என தெரிவித்தவர்கள், தற்போது அவர்களின் வாரிசுகள் வந்து அவர்கள் எதையெல்லாம் வேண்டாம் என்று சொன்னார்களோ அதற்கு தலைகீழாக மாறி அதனையெல்லம் பயன்படுத்தி எமது மக்களை பகடைக்காயாக பாவிக்கின்ற சூழல்தான் தற்போது மட்டக்களப்பு அரசியல் மாறியிருக்கின்றது.

இவ்வாறான சதிகளிலிருந்து எமது மக்களைக் காத்துக்கொள்வது எமது மண்ணுக்கான மாண்பீயத்தை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது என்பது தொடர்பில் மிகக் கச்சிதமாகச் சிந்தித்து முன்னேற வேண்டிய காலகட்டத்தில் தான் நாங்கள் அரசியல் செய்து கொண்டிருக்கிறோம்.

எமது கட்சி அடைய முடியாத இலக்குகளுக்காகப் போராடாமல், மக்களை இரத்தம் சிந்த வைக்காமல், ஜனநாயக ரீதியாகப் போராடி கையிலே இருக்கின்ற மாகாண சபைக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கின்ற விடயங்களில் கவனம் செலுத்துமே தவிர இன்னும் மக்களை மடையர்களாக்குகின்ற செயற்பாடுகளுக்கு கட்சி ஆதரவு வழங்காது.

கிழக்கு மாகாணத்தின் அடுத்த கட்ட தலைவிதியைத் தீர்மானிக்கின்ற தலைவர்களை, உழைப்பாளர் வர்க்கத்திலிருந்து கண்டு பிடித்து அவர்களைத் தலைமையாக்கி விடுவதுதான் எமது கட்சியினுடைய பணியாகும்" - என்றார்.

கிழக்கு செய்திகள் ■ மட்டக்களப்பு

# தந்தை செல்வாவின் எண்ணங்களோடு தோன்றிய தேசிய இன எண்ணங்கள் காணாமல் போகின்றது

## யாழ் பல்கலை அரசறிவியல்துறைப் பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம் ஆதங்கம்...!



இன்றளவும் ஒரு சமூகம் 1000 ரூபா சம்பளத்திற்காக போராடிக்கொண்டிருக்கின்றது. ஆனால் நாம் அதை வைத்து அரசியல் செய்து பிழைக்கின்றோம் என யாழ் பல்கலை அரசறிவியல்துறைப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தொழிலாளர் தின பொதுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரதியார் சிங்களத் தீவிற்கு பாலம் அமைப்போம் என்ற கூற்றே ஆகிவிட்டது ஆகப் போகின்றது. சீனா மாத்தறையில் ராடர் பொருத்துகிறது. இந்தியா மீள மீள 13 ஐ எப்படியாவது நடைமுறைப்படுத்திவிடுங்கள் என்கிறது அமெரிக்கா சோபாவை அமுல் படுத்தவில்லை என்கிறது.

பிரதேசமாக மோதி சாதியமாக மோதி தற்போது மதமாக மோதுகிறோம். நாம் சாதியம் மதமாக போராடினாலும் நம்முன்னேயுள்ள அரசியல் வறுமையானது. அது தற்போது தன்னுடைய இயலாமையின் எல்லைக்குள் இருக்கின்றது.

அந்த சூழலுக்குள்ளே தான் இனத்தினுடைய கட்டமைப்பு தேடப்பட வேண்டும். இத் தொழிளாளர் தினத்தின் உண்மையான நோக்கத்தை அடைய ஈழத்தமிழினம் முன் நிற்க வேண்டும்.13 ஐ மீள உச்சரிக்க ஒரு கூட்டமே உள்ளது. ஐ.நா சபை வரை கூறி விட்டார்கள். ராஜீவ் காந்தி இட்ட பிச்சை இந்திய இலங்கை உறவாடலாக 13 ம் திருத்தச் சட்டமுள்ளது.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு தரப்பு தீர்வு தருவார்கள் என நம்பியிருந்தனர். எவரும் ஈழத் தமிழர்களை கட்டமைக்க வேண்டும் என்று ஒரு போதும் எண்ணவில்லை. எல்லா மனிதனுக்கும் மதங்கள் உள்ளது. அதற்கு உரித்துடையவர்கள் அதை தான் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் உள்ளது. அதனை ஏற்றுக் கொள்வது என்பது கட்டமைக்கப்பட வேண்டிய விடயம். போலித் தேசியம் பற்றிய எண்ணத்தை விட்டுவிட்டு செயற்பட வேண்டும். இவற்றைக் கடந்து பொருளாதார ரீதியாகத் தேசியம் கட்டமைக்கப்பட வேண்டும்.

ஈழத் தமிழர்கள் தங்களுடைய இருப்புக்களில் மாற்றங்களை செய்ய வேண்டும். தமிழர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் சிங்களத்தீவுக்கு பாலம் அமைக்கும் நிலை ஏற்படும்.

ஈழத்தமிழர்களின் நகரக் கட்டமைப்பு பிரித்தானியரின் கட்டமைப்பிலிருந்தே ஆரம்பமாகிறது. புதிய வாழ்வியல் முறைகளை இது வரை ஆக்கியதாக தெரியவில்லை. ஒரு சில காணப்பட்டாலும் அவற்றின் இருப்புக்கள் பல பழைய அம்சங்களுடன் காணப்படுகின்றன.

இலங்கை உலக வல்லரசுகளின் தளமாகக் காணப்படுகின்றது. இலங்கையில் மிக பெரிய போராட்டம் இந்த மண்ணில் எந்த வல்லரசு தங்கள் இருப்பை நிலைநாட்டிக் கொள்வதேயாகும். அந்த தளத்தில் தான் மோதலும் போட்டியும் வளர்ந்து கொள்கின்றது. பொருளாதார நெருக்கடித் தளத்தில் தான் ஈழத் தமிழினம் அரசை சம தூரத்தில் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த சமூகம் தற்போது கையறு நிலையிலுள்ளது. அந்த விம்பத்தை உருவாக்கியதும் மக்களே. இவர்கள் இது சார்ந்த தெளிவை உருவாக்கினால் ஒரு கட்டமைப்பினூடாக பயணிக்க வேண்டும்.

நாம் எவ்வாறு தேசங்களோடும் நாடுகளோடும் எவ்வாறு உறவுகளை வைத்துக் கொள்வதில் அவதானம் வேண்டும்.இங்கு இருப்பது சைவமாக இருப்பினும் இந்துத் தேசியம் பற்றி பிரஸ்தாபிக்கின்றோம். இது தமிழ்த் தேசியத்தை இல்லாமலாக்கச் செய்யும் இலக்காக அமையும்.

தந்தை செல்வாவின் எண்ணங்களோடு தோன்றிய தேசிய இன எண்ணங்கள் காணாமல் போகின்றது. மிதவாத அரசியலுக்குள் பழக்கப்பட்ட சக்திகள் அதை நோக்கி மக்களை அலையாகத் திரட்டியுள்ளனர். அதேவேளை ஆயுதப் போராட்டத்த தலைமைக் கட்டமைப்பு காணாமல் போன போது சமூகத்தின் கட்டமைப்புக்கள் பலவும் சீர்குலைந்தன.

எனவே எதிர்காலத்தில் அரசியலுக்கப்பால் குறித்த கட்டமைப்பை பற்றி போலிகளுக்குள் பயணம் செய்வதை விடுத்து யதார்த்தங்களுடன் பயணிக்க வேண்டும் என்றார்

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## யாழில் அத்துமீறிய பௌத்த...

பொதுமக்கள் காணிக்குள் அத்துமீறி கட்டப்பட்ட விகாரையை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் - வலிவடக்கு தையிட்டி பிரதேசத்தில் இதுவரை காலமும் விடுவிக்கப்படாமல் உள்ள பொதுமக்களின் காணிக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற பௌத்த விகாரைக்கு மேலதிகமாக அதனைச் சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை எதிர்க்கும் முகமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக அனைவரும் ஒன்றினைந்து கண்டனப் போராட்டம் ஒன்றினை நடாத்த திட்டமிடப்பட்டள்ளது.

பருத்தித்துறை வீதி, தையிட்டி கலைவாணி வீதி முகப்பில் இன்று புதன்கிழமை (3) பிற்பகல் 3.00 மணிக்கு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

## தமிழரசுக் கட்சியின் தலைமை...

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு மூவர் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமைப் பதவிக்கு கடந்த தேர்தலின் போதே இருவர் தயாராகி விட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களான சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் அப்பதவிக்கு குறிவைத்துள்ளதாகவும், அதே வேளை, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானமும் தலைமைப் பதவிக்கு குறி வைத்துள்ளதாகவும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் மூத்த அரசியல்வாதியுமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு வரலாற்றில் என்றுமில்லாதவாறு போட்டி நிலவுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், கடந்த தேர்தலின் போதே சிறீதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தலைமைப் பதவி குறித்த நகர்வுகளில், களமிறங்கிவிட்டதாகவும், சுமந்திரனை வெல்ல வைப்பதற்கு, சிறீதரன் உதவியமைக்கான காரணமும் தலைமைப் பதவியைக் குறிவைத்ததாகவே அமைந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தலைமைப் பதவியைக் குறிவைத்து, இம் மூன்று பேரும் பல்வேறு நகர்வுகளில் ஈடுபட்டு வருவதாகவும் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

## தமிழர் பிரச்சினைகக்கான...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அவர், 13வது திருத்தச்சட்டம் எங்களுடைய பிரச்சினைக்கு தீர்வாகாது.

இதை நாட்டின் அதிபர் நடைமுறை படுத்த நினைத்தால் அது தற்காலிக தீர்வே அன்றி நிரந்தரமானது அல்ல.

13இன் கீழ் ஏழு மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ள சிங்களவர்கள் 2 மாகாணங்களில் பெரும்பான்மையாக உள்ள தமிழர்களை அடிமையாக நடத்துகின்றனர். தெற்கிலே ஒரு இந்து ஆலயத்தை தொல்பொருள் திணைக்களத்தினர் கண்டால் அதை கோவிலாக வடிவமைப்பார்களா?

அப்படி இருக்க வடகிழக்கில் வந்து விகாரைகளை அமைப்பதற்கான காரணம் என்ன? தமிழர் பகுதிகளில் சிங்கள ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெறுமனே சிங்களவர்கள் என்ற காரணத்திற்காக மாத்திரம் தமிழர் பகுதிகளில் உள்ள பௌத்த அடையாளங்களை உரிமைக் கோருவது முறையற்றது.

நாட்டில் பிரச்சினைகள் ஏற்படும் போது அதை தடுப்பதற்கு பல்வேறு சட்டங்கள் காணப்படுகின்றன.

இவர்கள் பயங்கரவாத தடை சட்டம் என்ற ஒன்றை கொண்டுவந்ததன் நோக்கம் அவரது எதிரிகளை அடைத்துவைத்து அவர்களை அடக்குவதற்காகவே ."" என தெரிவித்தார்.

## காவி உடையில் அரசியல்...

நான்காம் திகதியளவில் தீர்வு காண்போம் என்றும் கூறினீர்கள். இப்போதும் மீண்டும், மீண்டும் கூறுகின்றீர்கள். இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் தொடர்பான இனப்பிரச்சினை தொடர்பில், உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம் தயார். ஆனால், இனி நீங்கள் பேச்சை நிறுத்தி, செயலில் காட்டுங்கள். “வோக் யுவர் டோக் மிஸ்டர் பிரசிடென்ட்!”. (பேச்சின்படி நடந்து காட்டுங்கள்!).

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மே தின உரை தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

”இலங்கையில் இன்று இருக்கும் பெரும்பான்மை கட்சிகளின் தலைவர்கள் மத்தியில், தேசிய இனப்பிரச்சசினை தொடர்பில் காத்திரமான முயற்சிகளை எடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க. அதில் சந்தேகம் இல்லை. ஏனையோரைப் பற்றி சந்தேகங்கள் இருக்கின்றன.

எனினும், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமனம் பெற்ற பின் பலமுறை இந்தக் கால அட்டவணைக்குள் இனப்பிரச்சினை தீர்வு என பலமுறை கூறிவிட்டார். தமிழ் மக்களுக்கும் இந்த வசனம் பரிச்சயமானதாகும்.

சர்வகட்சி மாநாட்டை நடத்தி முதற்கட்டமாக 13ஐ பற்றி பேசிய போது அதுவரை ஒளிந்திருந்த ஆமதுருக்கள் தெருவுக்கு வந்தார்கள். அத்துடன் அது நின்று போய் விட்டது.

இன்று அரகல போராட்டத்துக்குப் பிறகு, கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு, சர்வதேச சமூகத்திடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்ட பிறகு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினை தீர்வு பற்றி, தமிழ்க் கட்சிகளை அழைத்துப் பேச முன் சிங்களக் கட்சிகளை அழைத்து நாட்டின் உண்மை நிலைமை பற்றிப் பேச வேண்டும். சிங்கள மக்களை விளித்து நேரடியாகக் கூற வேண்டும். இனிமேலும் இதைத் தள்ளிப் போட முடியாது என எடுத்துக் கூற வேண்டும். சர்வதேச சமூகமும் அதற்குச் சாதகமாக நடந்து கொள்ளும் என நான் அறிகின்றேன்.

தற்போது நிலைமையைப் பாருங்கள். “இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு”, “பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்” என்றெல்லாம் கூறுவதற்கு முன், வடக்கு, கிழக்கில் காணி பறிபோகின்றது. தொல்பொருள் திணைக்களம், தொல்லை திணைக்களம் ஆகி விட்டது. சிவனைத் தூக்கிக் கடாசி விட்டு, ஆமதுருக்கள், இராணுவத் துணையுடன், புத்தனை பிரதிஷ்டை செய்கின்றார்கள். காவி உடையில் அரசியல் செய்யும் ஆமதுருக்களை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அதற்கு இது தான் வேளை. இல்லாவிட்டால் கடும் பதற்ற நிலைமை வடக்கு - கிழக்கில் விரைவில் உருவாகும்.

மலைநாட்டில், வந்தவன், போனவன் எல்லாம் அடாத்தாகத் தோட்டக் காணிகளைப் பிடிக்கிறான். ஆனால், 200 வருட வரலாறைத் தொட்டு விட்ட பெருந்தோட்ட மக்களுக்கு வாழ, பயிர் செய்ய காணி இல்லை. மலையகத் தமிழருக்காக நான் குரல் கொடுத்தால், என்னைத் “தேயிலைக் கொழுந்து பறிக்க வந்தவன்” என்கின் றார்கள். “தோட்டக் காட்டான்” என்கின்றார்கள். இது மலைநாட்டுத் பெருந்தோட்ட பகுதிகளில் கடும் பதட்ட நிலைமையை மெதுவாக உருவாக்கி வருகின்றது.” - என்றார்.

## தமிழர் தீர்வு விடயத்தில்...

ஆனால் இந்த விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் முழுவதுமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாகவும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணிமாகிய எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், ஜனாதிபதி இடம்பெற்ற மே தின கூட்டத்திலே இன பிரைச்சினைகளிற்கான தீர்வு பற்றி பேசியுள்ளதுடன் அவர் ஜனாதிபதியாகிய காலத்திலிருந்து அதனை பற்றி பேசி வருகின்றார் என்பதே உண்மை.

அன்று பாராளுமன்றத்தில் நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னதாக இன பிரைச்சினையை தீர்த்து வைப்பதற்கு அவர் சம்மதம் கேட்ட பொழுது க மஹிந்த ராஜபக்ஷ கூட 13 வது திருத்தத்திற்கு மேலாக சென்று வைக்கவும் இணக்கம் தெரிவித்திருந்தார்.

அதை தொடர்ந்தே டிசம்பரில் ஜனாதிபதி ஒழுங்கு செய்த சர்வகட்சி மாநாட்டிலும் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்க்கு ஏற்பாடு செய்த 4 கூட்டங்களிலும் நாம் கலந்துகொண்டோம்.

அவை மட்டுமன்றி பெப்ரவரி 4 ஆம் திகதி மீண்டும் ஒரு சர்வ கட்சி மாநாட்டினை கூட்டி அதில் இனப்பிரச்சைனைகளை தீர்ப்பது குறித்த வழிவகைகளையும் கூறியிருந்ததுடன் பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகிய போதும், தனது கொள்கை விளக்கவுரையிலும் அவற்றையே கூறினார்.

ஆனால், இந்த பிரைச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முழுவதுமாக நாம் செயலாற்றுவோம் என்பதை நாட்டுடன் சர்வதேசத்துக்கு வெளிக்காட்டியுள்ளோம்.

தீர்வு பிரைச்சினைகளிற்காக தமிழ் அரசியல் கட்சிகள் தன்னுடன் ஒன்றிணையவில்லை என கூறுவது நகைப்பிற்குரிய விடயமாகும்.

இந்த பிரைச்சினைகளி தீர்த்து வைப்பதற்கான அனைத்து வழிவகைகளும் காணப்படுகின்றன. ஆகவே அவர் முதலில் தீர்த்து வைத்தால் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவது குறித்து பின்னர் சிந்திப்போம் எனவும் தெரிவித்தார்.

## தமிழர் பிரச்சினைகக்கான...

யாழ்ப்பாணச் சமூகம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், சுமந்திரனின் யாழ் மாவட்ட இணைப்பாளரும், இலங்கை தமிழ் அரசு கட்சியின் காங்கேசன் துறை தொகுதிக்கிளை தலைவருமான சுகிர்தன் வீட்டிற்குள் விஜிதாவின் இறப்பை தற்கொலை எனக் கருதிவிட்டு கடந்து போகின்றதா?

இவரின் இறப்பிற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரமுகர் சுகிர்தன் காரணம் என அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் சட்ட நுனுக்கம் மற்றும் அரசியல் பலத்தினால் இந்த மரணம் மூடி மறைக்கப்பட்டு சுகிர்தன் காப்பாற்றப்பட்டமை மிக வேதனையான செயல் என பெண்ணின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மரணத்திற்கான காரணம் என்ன என கண்டறிவதில் ஏன் யாரும் ஆர்வம் காட்டவில்லை? குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாசந்திரா பிரகாஸ், சுயாட்சிக்கான மக்கள் களகத்தின் தலைவி அனந்தி சசிதரன், ஜனாதிபதியின் நெருங்கிய சகா விஜயகலா மகேஸ்வரன், முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் அம்பிகா என யாழின் மிகப் பெரும் உரிமை மீட்பாளர்கள் விஜிதாவின் மரணத்திற்கு கேள்வி எழுப்பவில்லை சுமந்திரனின் இணைப்பாளர் என்பதாலா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அவர்களின் கேள்வியில் நியாயம் இருப்பதாகவே தென்படுகின்றது.

ஊடகவியலாளர்கள் கூட இந்த விடயத்தில் அமைதிப் போக்கைக் கடைப்பிடிப்பிடிப்பதுடன் இவ் விடயத்துடன் ஒரு இராணுவம் தொடர்பு என்றால் எப்படி செயற்பட்டிருப்பார்கள் இந்த ஊடகவியலாளர்கள் ஏன் இதில் அதிகளவு ஈடுபாடு காட்டவில்லை காரணம் ஜனாதிபதி சட்டத்தரணி சம்பவத்தில் உள்ளதாலா....

எல்லாவற்றுக்கும் போராடும் யாழ்ப்பாணத்தில் உள்ள எந்தப் பெண்கள் அமைப்புக்கள் ஏன் இந்த விடயத்தில் நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும் என இதுவரை கோரிக்கை விடவில்லை.

இங்கு தற்கொலை என்பது குறித்த பெண்ணின் தனிப்பட்ட முடிவாக இருக்கலாம்.

ஆனால் அதற்கான காரணங்களைக் கண்டறிந்தாலே உண்மையான விடயம் வெளியே வரும் என்பதுடன் இனி வரும் நாட்களில் நடக்கும் ஆபத்துக்கள் கூட தடுக்கப்படும்.

தற்கொலைக்கு காரணமானவர்கள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படாத வரை இவளின் இதே காரணத்திற்காக தற்கொலைகள் தொடரும் என்பது மட்டும் உண்மை.

CREATIVE DESIGNER
every design has a story
Logos | Flyers | Banners |
Name Boards | Brochures |
Catalogue | Magazines |
News Papers | Product Packaging |
Social Media Ads | Badges |
Menu | Posters | Vouchers
+94 77 3828 594

# கிழக்கில் இடம்பெறும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒரு கருத்துக் கூட வெளியிடாதவர்களால்

## கிழக்கை எவ்வாறு மீட்க முடியும்..? கலையரசன் கேள்வி



கிழக்கு மீட்பர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் எமது இருப்பை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாகவே இருக்கின்றது. வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலே நடைபெறுகின்ற சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒரு கருத்துக் கூட வெளியிடாதவர்களால் எங்களுடைய இனத்தை எவ்வாறு காப்பாற்ற முடியும்? கிழக்கை எவ்வாறு மீட்க முடியும்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வியெழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு களுவன்கேணியில் இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிழக்கு மாகாணத்திற்கான மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு கட்சிகளும் தங்கள் எதிர்கால இலக்கை நோக்கியே இந்தத் தொழிலாளர் தினத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியென்பது எமது சமூகத்தின் இருப்பு சார்ந்து செயற்படும் முகமாகவே இன்றைய இத்தொழிலாளர் தினத்தை முன்னெடுத்திருக்கின்றது.

எமது நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு இன்றுவரை எமது தமிழ் மக்கள் சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்து இன்றுவரை ஒரு நியாயமான தீர்வு இல்லையென்ற ஆதங்கத்தோடு இருந்து வருகின்றனர். உண்மையிலே இந்த நாட்டில் பௌத்த மேலாதிக்கம் மேலோங்கி எமது தமிழர்களின் எதிர்காலம், இருப்ப, கலாச்சாரம் சம்மந்தப்பட்ட விடயங்களில் தொடர்ச்சியான அடக்கு முறைகளையும், ஒடுக்கு முறைகளையும் ஏற்படுத்தி வருகின்றது. இதற்கெல்லாம் எங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களே துணையாக இருந்து செயற்படுவதுடன், அவர்கள் சிங்களப் பேரினவாதம் போடுகின்ற தாளத்திற்கு ஆடுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் பேச்சில் மாத்திரம் கிழக்கை மீட்பது பற்றிப் பேசுகின்றார்கள்.

2008ம் ஆண்டு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட போது நானும் அரசியலிலே இருந்தவன். கிழக்கை மீட்கப் புறப்பட்டவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் நானும் அனுபவித்தவன். அவர்கள் மாகாணசபையிலே இருந்த போது நான் பிரதேச சபையின் தவிசாளராக இருந்தவன் என்ற வகையில் உண்மையிலே அந்த நான்கரை வருடங்களாக எமது கிழக்கு மாகாணத்தையும், எமது சமூகத்தையும் ஏமாற்றியவர்கள் இன்னும் இன்னும் ஏமாற்றுவதற்கான சகல வேலைகளையும் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்குப் பின்னால் நமது இளைஞர்கள் செல்வதுதான் மிகவும் மன வேதனையான விடயம்.

உண்மையிலேயே எமது சமூகம் மீண்டும் மீண்டும் இவர்களுக்குப் பின்னால் சென்றால் எதிர்காலத்திலும் ஏமாற்றத்தைச் சந்திக்கப் போவதே உறுதி. ஏனெனில் அவர்களின் ஒவ்வொரு செயற்பாடும் தமிழ் மக்களுக்கென்று இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியை வலுவிழக்கச் செய்வதே.

நாங்கள் ஒரு புனித பயணத்தைப் பயணிக்கின்றோம். எங்களுடைய செயற்பாடுகளை எவராலும் அழிக்க முடியாது. ஆனால் அவர்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் எமது இருப்பை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாகவே இருக்கின்றது. அண்மைக் காலங்களிலே வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலே நடைபெறுகின்ற சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒரு கருத்துக் கூட வெளியிடாதவர்களால் எங்களுடைய இனத்தை எவ்வாறு காப்பாற்ற முடியும்? கிழக்கை எவ்வாறு மீட்க முடியும்? தற்போது இந்த ஆட்சி இடம்பெற்று சுமார் மூன்று வருடங்களாகின்றது. அவர்களால் என்ன வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடிந்திருக்கின்றது? எத்தனை தொழில் வாய்ப்புகளை வழங்க முடிந்திருக்கின்றது?

இன்று கிழக்கு மாகாணத்திலே, குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலே அரச தரப்போடு இணைந்து இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பதவிகள் எமது இருப்பை இல்லாதெழிப்பதற்காகவே அவர்களுக்கு வழங்கப்பட்டவை என்பதை இன்று எமது மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். இனியும் இவர்களால் எமது மக்களை ஏமாற்ற முடியாது.

எனவே நாங்கள் ஒன்றுபட வேண்டும். இந்தத் தொழிலாளர் தினத்திலே தொழிலாளர்கள் பெற்ற உரிமையைப் போன்று ஈழத் தமிழர்களும் எதிர்காலத்தில் எங்களது இருப்பு, வாழ்வுரிமைக்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அந்த ஒன்றுபடல் என்பது எமது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால் மாத்திரமே சாத்தியமாகும் என்று தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள் ■ சுமன் - அம்பாறை

## புலம்பெயர் தமிழரின் கல்வித் திட்டம் சாதனையாளர்கள் கௌரவிப்பு!



திருகோணமலை வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பின்தங்கிய 5 தமிழ் பாடசாலைகளை குறிக்கோளாய் வைத்து அம்மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் மகிழ்வோம் மகிழ்விப்போம் எனும் தொணிப் பொருளைக் கொண்ட வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும், சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் திங்கட்கிழமை மாலை பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வெருகல் பிரதேச பல்கலைகழக மாணவர்கள் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

05 வருட திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிகழ்வை ஸ்ப்பெயின் நாட்டில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளரும், இவ் வேலைத்திட்டத்தின் உறுதுணையாக இருந்த நேதாஜியின் தாயார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இதன்பின்னர் அதிதிகளால் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. இந்நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்கள் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.



நிகழ்வில் ஈச்சிலம்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள்,துறைசார் உத்தியோகத்தர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பூநகர் பிரதேச சமூக மட்டத் தலைவர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கு செய்திகள் ■ திருகோணமலை

